உ

கடவுள் துணை.

# குசுவினிகருப்பாயி பாட்டு

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதரூஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்பமுதலிவீதி, மதரூஸ். என். சி.

உ

கடவுள் துணை.

# குசுவினிகருப்பாயி பாட்டு.

——(*)——

## வெண்பா.

அண்டர்மகிழ அறுமூன்று ஆயுதத்தை
தொண்டரெனவெடுத்து தொல்புவியில்நின்றுடும்
கல்லுளிமங்கன் கதையைத் தமிழாகச்
சொல்லவே ஆதி துணை.

## பல்லவி.

பதன்சங்காரி திருதாணம்-பல்
தேவிபஞ்சனி உன்கிருபை.

## அநுபல்லவி.

ஆதிபராபரம் துணையிருக்க
ஆனந்தரூபி உன்பாதம்
சோதிவயிரவி துதிசெய்தேன்-பல்
சுந்திரவடிவே யெனையாள்வாய்.
ஆனைமுகத்தோனே யடிதொழுவோம்
ஹரனரிஉமையே உன்பாதம்
கந்தானந்தா கதிர்வேலா-சிவ
கரிமுகவிநாயகா முன்னடவாய்
வாலைசரஸ்வதி யென்னுவில்நீ
வந்திருமடிமாதாவே
காளைநபினர் கவிபாட-பல்
கருணைபுரியடி பெத்தவளே.

## குசவினி கருப்பாயி பாட்டு.

மதுரைமீனாள் துணையிருப்பாள்
வடமலையழகா துணையிருப்பார்-பல்
காசிவிஸ்வேசர் துணையிருப்பார்-பல்
காமாக்ஷியம்மன் துணையிருப்பாள்.

அல்லாரசூல் துணையிருப்பார்
ஆலிவுலியார் துணையிருப்பார்
முகையதீன்ஆண்டவர் துணையிருப்பார்
முமீன் முஸ்லீன் துணையிருப்பார்.

நாகூர்மீரா துணையிருப்பார்
நடுக்காடரசர் துணையிருப்பார்
சிக்கந்தர்பாஷா துணையிருப்பார்
டிப்புசுல்தான் துணையிருப்பார்.

குணங்குடிமஸ்தான் துணையிருப்பார்
கோட்டையூர்சுவாமி துணையிருப்பார்
வாலமஸ்தான் துணையிருப்பார்
வாள்வரத்தாய் துணையிருப்பார்.

கல்லுளிமங்கன் துணையிருப்பான்
கடுவெளிசித்தன் துணையிருப்பார்
பயிராகிசித்தன் துணையிருப்பார்
வடபத்திரகாளி துணையிருப்பார்.

# குசுவினி கருப்பாயி பாட்டு.

மாரிவீரி துணையிருப்பார்
வைரசாமி துணையிருப்பார்
முப்பத்துமுக்கோடி தேவர்கள் சித்தர்
முன்னவர்கள்வந்து வரங்கொடுப்பார்-பல்

லக்ஷிமி இருந்து விளையா -
நாட்டிலுள்ள யிணியோட
காளைநயினர் கவிபாட-பல்
காரிடுமேகம் தொனிபோட

குசுவினிக்ருப்பிக்கி கலியாணம்
குதிரைவெட்டையாம் பணியாரம்
சாப்பிடவந்த ஜனங்களெல்லாம்
தவுட்டுகளிகளா நெய்சாதம்-பல்

கெட்டகேப்பையாம்பாயாசம்
சீரைத்தண்டுவால்மிளகுரசம்
கூவரைமொச்சையாம் கடுச்கிசிறு
அகத்திக்கீரையாம் கரிபொரியல்

மணவரைப்பந்தலாம்வாசற்படி
வத்தாட்டுத்தோலாம் கூரைச்சீலை
மெச்சிகூடாரம் பொன்தாலி
ஒட்டைப்பானையாம் அரசானி-பல்

புளியங்கொட்டையாம் களிப்பாக்கு
பூவரசயிலையாம்தாம்பூலம்

## குசுவினி கருப்பாயி பாட்டு.

உளுந்தமரப்பொடிசந்தணம்
உப்புத்தண்ணீராம் பன்னீரு

ஊருஜனங்களை வரவழைத்து
உசிலயிலைமேலே பரிமாறி
சாப்பிட்டஜனங்களை கையமர்த்தி
தாம்பூலசந்தணம் முன்னடத்தி

தப்புதப்பட்டம் கொம்பூத
தாளமேளம் சங்கூத
மணவரைப்பந்தலில் மாப்பிள்ளையும்பெண்ணும்
மகிழ்ச்சியாகவே உட்கார

மள்ளுப்பரையெல்லாங்குலவையிட
பஞ்சாங்கய்யர் வேதமோத
தாலிகட்டப்போகையிலேயவர்
தடபுடவென்றுதாங் கருப்பாயிக்கு

குசுவல்லோவருதென்று கருப்பாயி
கூடியமட்டும் அடக்கினளாம்
என்னமா அடக்கிப்பார்த்தாலும்
இருக்கமாட்டே னென்றிடுச்சாம்

அடக்கிமடக்கிப் பார்த்தாளாம்
அங்கிட்டு மிங்கிட்டு நெளித்தாளாம்
ஆசனந்தரையிலே தேய்த்தாளாம் அவள்
கூடியமட்டும் பார்த்தாளாம்

## குசுவினி கருப்பாயி பாட்டு.

ஏண்டமட்டும் பார்த்தாளாம்
இடதுகையாலே அடைத்தாளாம்
புத்திமதியைச் சொன்னாளாம்-குசு
பொறுக்கமாட்டேனென்றிடுச்சாம்

காற்றென்றால் போவென்றாலும்
தாவாரங்கட்டையைப்பிடித்தாளாம்
கெஞ்சிக்கெஞ்சிப் பார்த்தாளாம்-குசு
கேழ்க்கமாட்டே னென்றிடுச்சாம்

சபைகளிருந்ததுபாராமே-குசு
சங்கதிசொல்லியும் கேளாமே
உரமுறையிருந்ததும் பாராமே-குசு
உத்ததுசொல்லியம் கேளாமே

கும்மென்று பொருகுச்சாமொரு-குசு
குகுகுருவென்றுச்சாமொரு குசுவு
தாங்கமுடியாமல் கருப்பாயியவள்
டம்மென்றுபோட்டாளாம் ஒருகுசுவை

நாணிக்கோணிப் பார்த்தாளாம்-அவள்
நாற்பதுகுசுவைப் போட்டாளாம்
அடக்கிமுடக்கிப் பார்த்தாளம்-அவள்
அம்பதுகுசுவைப் போட்டாளாம்

பாய்கிழிந்து பரட்டைகிழித்து
பனிரெண்டு ஆட்டுத்தோல்கிழித்து

மணவரைப்பந்தலை தூக்கிக்கொண்டு
மலையாளம்போகுதா மொருகுசவு

சீலையைப்பரிக்குதா மொருகுசவு
சொல்லையிலடிக்குதா மொருகுசவு
அரசாணிப்பானையம் அம்மியும்தூக்கி
அந்தரமாய்ப்போகுதா மொருகுசவு

கூரையைப்பரிக்கிதா மொருகுசவு
கூத்துகளாடுதா மொருகுசவு
கல்யாணப்பந்தலை தூக்கிக்கொண்டு
காசிக்குப்போகுதா மொருகுசவு

சுத்திசுழலுதா மொருகுசவு
சூரைகளாடுதா மொருகுசவு
வேதமோதியபார்ப்பாரைத் தூக்கி
விண்ணில்பரக்குதா மொருகுசவு

வேஸ்டியை யுரியுதா மொருகுசவு
வெக்கதலைதக்கெடுக்குதா மொருகுசவு
நாசியிலேறி மீசைகள் கருக
நாத்தமெடுக்குதா மொருகுசவு

மூச்சைப்பிடிக்குதா மொருகுசவு
மூச்சடி நுழையுதா மொருகுசவு
குமரிப்பெண்களைத் தூக்கிக்கொண்டு
கோபுரமேருதா மொருகுசவு

# குசுவினி கருப்பாயி பாட்டு.

ஆளைமிரட்டுதா மொருகுசுவு
அலறி அடிக்குதா மொருகுசுவு
சாகப்போகிறக் கிழவியைத் தூக்கி
சந்தில்போடுதா மொருகுசுவு
பட்டபடென்குதாமொருகுசுவு
பாங்காவூதுதா மொருகுசுவு
வாணியன்செக்கை தூக்கிக்கொண்டு
மதுரைக்குப்போகுதா மொருகுசுவு
குருகுரு என்குதாமொருகுசுவு
கூட்டங்குலைக்குதா மொருகுசுவு
வண்ணான்கல்லைத் தூக்கிக்கொண்டு
மைசூருக்குப்போகுதா மொருகுசுவு
தருபுருயென்குதா மொருகுசுவு
தாளங்கள்போடுதா மொருகுசுவு
தப்புதப்பட்டம் எல்லாம்பிடிங்கி
சாத்தூர்போகுதா மொருகுசுவு
குசுக்களெல்லாம் கூடிக்கொண்டு
கும்பகோணம்வழி போகையிலே
கும்பகோணத்து ஆயக்காரன்-பல்
குசுவுக்கு அரைப்பணம் வாங்கிப்போட்டான்

குசுவினி கருப்பாயி பாட்டு

முற்றிற்று.